செயற்பொறியாளர் பொபது.,நீஆஅ., கோதையாறு வடிநில கோட்டம்,நாகர்கோவில்
அவர்களின் செயல்முறை நடவடிக்கை.

---

முன்னிலை : பொறி. சு.க.சுப்ரமணி பி.இ.,
செயற்பொறியாளர் பொபது.,நீஆஅ.,

----

**செ.மு.ஆணை எண் இ1/2491/2017/ நாள் 03.10.2017**

**பொருள்:** பணியமைப்பு – பொபது – தமிழ்நாடு அமைச்சுப்பணித்தொகுதி – திரு.கா.கோபகுமார், இளநிலை உதவியாளர், பணிவரன்முறை மற்றும் தகுதிகாண் பருவம் துவங்குதல் - ஆணைகள் விளம்பல் - குறித்து

**பார்வை** :1.முதன்மை தலைமைப்பொறியாளர்,(கட்டடம்) தலைமைப்பொறியாளர் (கட்டடம்) சென்னை மண்டலம், மற்றும் தலைமைப்பொறியாளர் (பொது). பொபது.. அவர்களின் செயல்முறை ஆணை எண் எஸ் 3(3)/ 34990/2016 நாள்:10-07-2017

***********

தமிழ்நாடு அரசு பணியாளர்கள் (பணிநிபந்தனைகள்) சட்டம்-2016 (தமிழ்நாடு சட்டம் 2016) ல் உள்ள பிரிவில் 47(1) ன் படி கீழ்நிலை பதவியிலிருந்து பதவி மாற்றம் மூலமாக இளநிலை உதவியாளர் பதவிக்கு 2015-2016 ஆம் ஆண்டிற்கான தேர்ந்த பெயர் பட்டியலிருந்து தெரிவு செய்யப்பட்டு 24-07-2017 பிற்பகல் முதல் பணிமேற்கொண்டு வருகிறார். அன்னார் இளநிலை உதவியாளர் பணியில் சேர்ந்த நாளான 24-07-2017 பிற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

இவரது தகுதிகாண் பருவம் தமிழ்நாடு அரசு சார்நிலை பணி விதி 23(அ)(1) ன் படி அவர் பணியில் சேர்ந்த நாளான 24-07-2017 பிற்பகல் முதல் தொடங்குவதாக விளம்பப்படுகிறது.

இவரது இரண்டு ஆண்டுகால தகுதிகாண் பருவத்தினை மூன்றாண்டு தொடர் பணியில் முடித்தல் வேண்டும்.

இவர் தகுதிகாண் பருவகாலத்திற்குள் பவானிசாகர், அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தில் நடைபெறும் அடிப்படை பயிற்சியில் கலந்து கொண்டு தேர்ச்சி பெற வேண்டும் எனவும் அறிவிக்கப்படுகிறது.

செயற்பொறியாளர், நீஆஅ/பொபது.,
கோதையாறு வடிநில கோட்டம்,
நாகர்கோவில்.

3-10-17

பெறுநர்:
திரு.கா.கோபகுமார்,
இளநிலை உதவியாளர்,
கோட்ட அலுவலகம்.